1979 மார்ச் 14]

கொள்ளுமா? இப்படி விரும்பத்தகாத பேர்வழிகள் அவர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும் சரி, அரிசனங்களை ஏமாற்றி பணம் பறிக்கும் வழிகளை மேற்கொண்டு வருவதால், இது தொடராமல் இருப்பதற்கு காவல் துறையிலும், மற்றும் ரெவின்யூ இலாகாவிலும், அதிலும் குறிப்பாக தாசில்தார் வகையறா அலுவலர்களைக் கொண்டு அதைக் கண்காணிக்க தொடர்ந்து ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் விவரம் தெரியாதவர்கள் என்கிற காரணத்தால்தான் இது போன்ற சமூக விரோதிகள் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறார்கள். வீட்டு மனை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இப்படிப்பட்ட கையாடல் பேர்வழிகள் கண்டுபிடிக்கப்பட்டு உடனடியாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை ஆகவே இந்த முனியப்பனையும் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தான் கைது செய்து, தற்போது நீதிமன்றத்தால் ஜாமீனில் விடப்பட்டு இருக்கிறார். அந்தப் பகுதி மக்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம்

*வினா எண் 390—திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு அரிசன நலத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் நிரந்தரமான அமைப்பா அல்லது தற்காலிகமானதா?

(ஆ) தற்காலிகமானதாயிருப்பின் எப்போது நிரந்தரம் ஆக்கப்படும்?

(இ) அதில் நியமிக்கப்பட்டிருக்கும் பணியாளர்கள் யாவரும் நிரந்தரமாக்கப்பட்டுவிட்டார்களா?

(ஈ) இல்லை என்றால், எப்போது நிரந்தரமாக்கப் படுவார்கள்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) தமிழ் நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் தற்காலிகமான அமைப்பு.

(ஆ) அதை நிரந்தரமாக்கப்படுவதைப்பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

[1979 மார்ச் 14

(இ) அதில் நியமிக்கப்பட்டிருக்கும் பணியாளர்கள் யாவரும் நிரந்தரமாக்கப்படவில்லை.

(ஈ) கழகம் நிரந்தரமாக்கப்படுவது குறித்து முடிவு எடுத்த பின் பணியாளர்கள் நிரந்தரமாக்கப்படுவது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் அரிசனங்களுக்கு அதுவும் வருமானம் குறைந்தவர்களுக்கு இனாமாக வீடுகட்டிக்கொடுக்க அமைக்கப்பட்டது. அது இதுவரையில் நிரந்தரமாக்கப் படவில்லை என்று சொன்னார்கள். அதற்கு என்ன காரணம்? அவர்களுக்கு இதுவரையில் எத்தனை வீடுகள் இந்த கழகத்தின் சார்பில் கட்டித் தரப்பட்டிருக்கின்றன? அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களும் நிரந்தரமாக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, இந்த கழகத்தை நிரந்தரமாக்கி, வீடு இல்லாத-கடன் கூட பெற முடியாத நிலையில் இருக்கின்ற—அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்க விசேஷ முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த நிறுவனம் 1974 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. பல்வேறுபட்ட நிறுவனங்களிடமிருந்து, அதாவது—ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், கட்கோ போன்ற நிறுவனங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்—போன்றவைகளிடமிருந்து எதிர்பார்த்த அளவுக்கு இந்த கழகத்திற்கு கடன் உதவி கிடைக்கவில்லை. உரிய கடன் வசதி கிடைக்காததால் பணிகள் அதிகம் இல்லை. ஆகவே இந்தக் கழகம் இதுவரை நிரந்தர மாக்கப்படவில்லை. அரசாங்கம் தருகின்ற நிதியை வைத்துக் கொண்டு வீடு கட்டும் பணியையும் மற்றப் பணிகளையும் இந்தக் கழகம் செய்து கொண்டிருக்கிறது. கிடைக்கிற நிதி குறைவாக இருப்பதால் நிரந்தரமாக்குவது தள்ளிப்போடப்படுகிறது. இந்தக் கழகமே நிரந்தரம் இல்லாமல் இருக்கும்போது அதிலே பணி யாற்றும் பணியாளர்களை நிரந்தரமாக்குவதையும் கொஞ்சம் தள்ளி வைத்திருக்கிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, இந்தக் கழகமே நிரந்தரமில்லை என்று சொன்னார்கள். அப்படி இருக்கும்போது சென்னையிலிருந்து விழுப்புரத்திற்கு இதன் அலுவலகத்தை ஏன் மாற்ற வேண்டுமென்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கும்போதுதான் நிரந்தரமாக்கப் படவில்லை. விழுப்புரத்திற்குப் போனபின்னாலாவது நிரந்தர மாகுமா என்கிற எண்ணத்திலேதான் அங்கு இந்த அலுவலகத்தை மாற்றியிருக்கிறோம்.

1979 மார்ச் 14]

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இந்த அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டில் வீடற்றோர்களுடைய சர்வே ஏதாவது எடுத்துள்ளதா ? இந்தக் கழகத்திற்கு விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர் ? இந்த ஆண்டு அவர்களில் எத்தனை பேர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு உத்தேசித்து உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் ; தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் எத்தனை அரிசனங்களுக்கு அல்லது அரிசன குடும்பங்களுக்கு வீடு இல்லை என்கிற சர்வேயை எடுத்தபோது கிட்டதட்ட 8 இலட்சத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் இருப்பதாக தற்போது அறிகிறோம். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் நிரந்தரமான வீடு கட்டித் தர நிதி நிலைமை இந்த கழகத்திடம் தற்போது இல்லை. ஆகவே, எதிர்காலத்தில் செய்து தர யோசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு எத்தனை வீடு என்று கேட்டார்கள். 1,666 வீடுகளுக்கு இதுவரை முடிவு செய்து நான் கையெழுத்து இட்டிருக்கிறேன்.

திரு இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக இந்த அரசு வந்த பிறகு கட்ட ஆரம்பிக்கப்பட்ட வீடுகள் 'பேஸ்' மட்டத்தில் அப்படியே நிற்கின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகளுக்குக் கூட இதுவரை வீடுகளைக் கட்டிய கான்ட்ராக்டர்களுக்கு பணம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று அதிகாரிகளைக் கேட்டால் அரசாங்கத்திலிருந்து நிதி ஒதுக்கீடு எதுவுமே செய்யவில்லை என்று சொல்கிறார்கள். அது உண்மையா? கட்டி முடிக்கப் பட்ட வீடுகளுக்கு உரிய பணத்தை கான்ட்ராக்டர்களுக்கு கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினாவில் எதுவுமே உண்மை இல்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கட்டப்பட்ட வீடுகள் 'பேஸ்' மட்டத்தில் இருக்கின்றன என்று சொன்னார்கள். பல ஊர்களில் வீடுகள் கட்டப்பட்டு, அந்த வீடுகளில் குடியிருக்கிறார்கள். இந்த அரசை பொறுத்தவரையில் அவ்வப்போது பணத்தை ஒதுக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 391

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, முழுமையான பதில் வரவில்லை. இன்னொரு கேள்விக்கு வாய்ப்பு கொடுங்கள். (திரு. செ. சிவசாமி, திரு. சி. ஆறுமுகம், மற்றும் சிலர்— எங்களுக்கும் வாய்ப்பு வேண்டும்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்வியில் எல்லோருக்கும் எப்படி துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு கொடுக்க முடியும்? இன்னும் 10 நிமிடங்களுக்குள் கேள்வி நேரத்தை முடிக்க வேண்டும். எல்லோருக்கும் வாய்ப்பு வேண்டுமென்று கேட்கிற முறையே தவறு.

திரு. சி. ஆறுமுகம்: எல்லோரும் கேள்வி கேட்கத்தான் இங்கே வந்திருக்கிறோம். முக்கியமான கேள்வியாக இருந்தால் பலர் கேட்கத்தான் செய்வார்கள். நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: நான் கேட்ட கேள்வி சம்பந்தப்பட்ட ஊரையாவது சொல்லிவிடுகிறேன். அனுமதி.... (திரு. சி. ஆறுமுகம் உட்கார்ந்துகொண்டே பேசிக் கொண்டிருந் தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாரும் உட்கார்ந்து பேசக் கூடாது. என்னை வற்புறுத்தி யாரும் கேட்க முடியாது. நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன். அதன் பிறகு முன் கேள்வியில் துணைகேள்வி கேட்க வாய்ப்பு வேண்டுமென்று கேட்ப சரியல்ல. நான் தீர்ப்பு சொன்ன பிறகு மறுபடியும் அதுபற்றி கேட்கக் கூடாது.

எலி ஒழிப்புத் திட்டம்

*வினா எண். 391

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்:
திரு. என். கிட்டப்பா:

மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வயல் பயிர்களை நாசம் செய்யும் எலிகளை ஒழிப்பதற்கு விவசாயிகள் அரசிடம் முறையிட்டுக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது சம்பந்தமாக அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) குறிப்பிட்ட கோரிக்கை ஏதும் வரவில்லை.

(ஆ) எலிகளை ஒழிக்கும் திட்டம் விவசாயத் துறையில் பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக எல்லா மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றது. எலிகளை ஒழிக்கும் மருந்துகள் போதுமான அளவு வேளாண்மைத் துறையின்